தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

கிழமை இதழ்

ிகுதாதி 1 (தி. பி. 2014 நளி-25 (11 - 12 - 1983) விலை 0-65 காசு இதழ் எண் : 27 பகுதி 49-51

தமிழீழ விடுதலையின்றித் தமிழரைக் காப்பது தலை இன்றி முண்டத்தைக் காப்பதாகும்!

இந்திரா-செயவர்த்தனே சூழ்ச்சியில் விடுதலைப் போராளிகள் சிக்கிவிடக் கூடாது!

தமிழீழ விடுதலையைக் கைவிட்டுவிட்டு எதிர் காலத்தை இருட்டாக்கிக் கொள்ளவேண்டாம்!

விடுதலைப் போராட்டக் குழுக்கள் ஒன்றிணைந்து செயல்படுவது நல்லது!

தேவையானால் போராட்ட இளைஞர் குழுக்கள் கூட்டுத்தலைமை அமைத்துக்கொள்ளலாம்!

அரசியல் தலைவர்களை இனியும் நம்ப வேண்டாம்!

தமிழீழப் போராளிகளுக்குப் பாவலரேறு அறிக்கை!

இலங்கைத் தமிழர்க்கு நேர்ந்து வரும் கொடுமைகள் உலக வரலாற்றில், விடுதலை இயக்கங்களுக்கு நேர்ந்த கொடுமைகள் அனைத்திலும் உச்சமானவை. இனி, இவை முடிவானவையும் அல்ல. ஒரு நாட்டின் விடுதலை இயக்கப் பாதையில், இந்நேர்ச்சிகள் கூடுதலானவையே ஆனாலும், நாம் இதனினும் குறைந்த விலை கொடுத்து விடுதலையைப் பெற்று விட முடியாது! எனவே இக் கொடுமைகளை முன் வைத்து, விடுதலைக் கோரிக் கையைக் கை விட்டு விடுவதோ, அல்லது அதற்குக் குறைவான மதிப்புடைய ஒரு தீர்வை நாம் ஏற்றுக் கொள்வதோ, வெகுமதியுடைய உரிமைப் போராட்டத்தையே இழிவு படுத்துவதாகும். இவ்வகையில், ஈழத்தமிழரின் இனவுரிமைப் போராட்டம் கைநெகிழ்க்கப் படுமானால், இனி எத்தக் காலத்திலும், தமிழினம் தன்னை அடிமைத் தளையிலிருந்து மீட்டுக் கொள்ளும் போராட்டம் ஒன்றைத் தொடங்க முடியாமலேயே போய் விடக் கூடும். சூட்டுப் பாலைச் சுவைத்த தெனாலி ராமன் பூனைக்குட்டி போல், எந்தப் போராட்டத்திற்கும் எதிர் காலத் தமிழர் அஞ்சவே செய்வர். தமிழினத்தையே காலங் காலமாய் அடிமைப் படுத்தி விடும் இத்தகைய முடிவை எவரும் நினைத்துப் பார்க்கவே கூடாது. தமிழீழ விடுதலையை விட்டுக் கொடுத்து விட்டுத் தமிழர்களைக் காக்க முயல்வது, தலையை விட்டு முண்டத்தைக் காப்பது போல் ஆகும்! தமிழீழ விடுதலையைக் கை விடுவது எதிர் காலத்தை இருட்டாக்கிக் கொள்வதுமாகும்!

தொடக்கத்திலிருந்தே இந்திரா - செயவர்த்தனே பேச்சுத் தீர்வுக்கு நாம் செவி சாய்த்திருக்கக் கூடாது. ஆனால், ஏதோ ஒரு கால கட்டத்தில், செயற் கொடுமைகளின் சூட்டு அழுத்தத்தில், அவ்வாறான தீர்வுக்கு நாமும் காத்திருக்க வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது. வெயில் கொடுமை தாளாமல் ஓர் ஒற்றைப் பனைமர நிழலில் ஒதுங்கியவன், அந்த நிழலை விட்டு நகர மனமில்லாமல் இருப்பது போல், நம் தமிழர் ஒன்றிய விடுதலை முன்னணித் தலைவர்களும், காலாற்றிக் கொள்ள வந்த இடத்திலேயே நிலையாகத் தங்கி விடவும் எண்ணி, விட்டனர் போலும்! இனி, அதுவுமல்லாமல், அனைவரும் வந்து அந்த ஒண்டிப் பனைமர நிழலிலேயே தங்கலாம் என்றும் அறை கூவி அழைப்பது போல், இந்திரா-செயவர்த்தனே பேச்சுத் தீர்விலேயே நிறைவு காணவும் விரும்புகிறார்கள் போல் தெரிகிறது. இந்நிலை உண்மையாகவே ஆகி விடுமானால், இஃது இனத்தையே காட்டிக் கொடுக்கும் செயலல்லாமல் வேறாக இருக்க முடியாது. இத்தகைய அரசியல் தலைவர்களை இனியும் போராட்ட இளைஞர்கள் நம்ப வேண்டுவதில்லை.

எவ்வாறாயினும், தமிழீழ விடுதலைப் போராட்டம் இனி இளைஞர்கள் தோள்களிலேயே வந்து அழுத்தி விட்ட சுமையாகப் போய் விட்டது. எனவே, விடுதலைப் போராட்டக் களத்தில் குதித்து விட்ட இளைஞர்கள் இனியும் பல குழுக்களாகப் பிரிந்து இயங்குவது நல்லதன்று. அது மேலும் பல அழிவுகளைத் தருவதுடன், இரண்டகங்களுக்கும் வஞ்சகங்களுக்கும் வழி விட்டதாகவும் ஆகி விடும். ஆகவே, புலிகள் இயக்கம் முதலிய விடுதலைப் போராட்டக் குழுக்கள் இனி விரைந்து ஒன்றிணைவது எல்லா வகையிலும் நல்லது. அவர்கள் தங்களுக்குள் ஓர் இணைவை ஏற்படுத்திக் கொண்டு, நல்ல எண்ணத்துடன் பேசி முடிவு செய்து, ஒரு கூட்டுத் தலைமையை உருவாக்கிக் கொண்டு செயல் படலாம். திசை மாறிச் செல்லும் கப்பல்களை விட நாம் விரும்பியவாறு வலித்துக் கொள்ள உதவும் எளிய தடுப்புப் படகுகளே நமக்குப் போதுமானவை! அவையே நாம் விரும்பும் உரிமைத் தீவுக்கு நம்மை அழைத்துப் போகும் நம்பிக்கை உடையவையாக இருக்கும்! வாழ்க தமிழீழம்!

மொழி, குமுகாயம், அரசியல், பொருளியல், கலை, அறிவியல், பண்பாடு ஆகிய ஏழு துறைகளிலும் உலகத் தமிழினத்தை மேம்பாடுறச் செய்யும் ஓர் உண்மை உழைப்பியக்கம், உ. த. மு. க.

இலங்கையில் 10 ஏதிலியர் தங்குமனைகளில் உள்ள இருபதாயிரம் தமிழர்கள் வீடு திரும்ப

வழியின்றித் தவிக்கின்றனர்!

இலங்கையில் ஏறத்தாழ 4 மாதங்களுக்கு முன்னர் நடந்த கொடுமையான இனக் கலவரங்களால் தாக்கப்பட்ட தமிழ் ஏதிலியர்களில் இன்னும் 20 ஆயிரம் பேர் தங்கள் வீடு திரும்ப வழியின்றி 30 ஏதிலியர் தங்கு மனைகளில் தங்கியுள்ளனர்.

இவர்களைத் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திருப்பிப் போகும்படி, தங்குமனைகளில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் மறுத்து அங்கிருந்து வெளியேற விரும்பாமல் அங்கேயே காலம் கழித்து வருகின்றனர்.

ஏதிலியர் மனைகளில் வசதிகள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. உணவு சிறு அளவே கொடுக்கப்படுகிறது. தேநீர் கூட அரைக்குவளை கால்குவளை அளவே கொடுக்கிறார்கள். குளிப்பது, கழிப்பது மிகவும் தொல்லை. இருப்பினும் அவர்கள் அச்சத்தினாலும் அதிர்ச்சியினாலும் வெளியே போக மறுக்கின்றனர்.

மேலும் அவர்களின் பெரும்பாலான வீடுகளும் சொத்துகளும் கலவரத்தின் போது அழிக்கப்பட்டு விட்டன. சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. இவர்களில் 90 விழுக்காட்டினர் நாடற்ற - குடியுரிமை இல்லாதவர்களாகையால், இவர்கள் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்குப் போக விரும்பாமல், இந்தியாவுக்கே வர விரும்புகின்றனர்.

இந்தியாவில் இவர்களுக்கென்று உறவினர்களோ நண்பர்களோ யாரும் இல்லை. உரிமை கொண்டாட சொத்துகளோ, வீடுகளோ, நிலங்களோ இல்லை. எனவே இந்தியாவுக்கு - அதாவது தமிழ் நாட்டிற்கு வந்தால் வாழ்க்கை நடத்த மிகவும் தொல்லைப்பட வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், தங்கள் மூதாதையரும் முன்னோரும் வாழ்ந்த நிலங்கள் என்னும் உரிமையில் தமிழகத்திற்கே அவர்கள் வர விரும்புகின்றனர்.

தங்கு கூடங்களின் நுழை வாயில்களில் துமுக்கிகளுடன் சிங்களப் படைத்துறை வீரர்கள் காவல் காத்து நிற்கின்றனர். பிறர் எளிதே உள்ளே நுழைய முடியாதபடி கடுமையான கட்டுப்பாடுகள் உள்ளன.

கடந்த சூலையில் நடந்த கலவரமும் வன்முறைக் கொடு நிகழ்ச்சிகளும் ஏதிலியர் மனங்களில் அழியாத தழும்புகளாக இருந்து கொண்டே இருக்கின்றன. எனவே இவர்கள் மீண்டும் இலங்கையின் பிறபகுதிகளுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

ஆனால், இவர்களை அண்மையில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க வாய்ப்புகள் எதுவும் இல்லை என்று, ஏதிலியர் துயர் துடைப்புப் பொறுப்பதிகாரியான பிராட்மன் வீரக்கோன் செய்தியாளர்களிடம் கூறினார்.

பெரும் பாலான ஏதிலியர் கூடங்கள் பள்ளிக் கூடக் கட்டிடங்களில் உள்ளன. வரும் சனவரி மாதத்தில் பள்ளிகள் திறக்கப்படும். எனவே ஏதிலியர் கூடங்களை மூடிவிட இலங்கை அரசு விரும்புகிறது. இதனால் தமிழ் ஏதிலியர் மிகவும் கவலை கொண்டிருக்கின்றனர்.

தொடக்கத்தில் 1 இலக்கமாக இருந்த ஏதிலியர் தொகை (இது சரியான கணக்கன்று; அரசு தரும் பொய்க் கணக்கே.) இப்பொழுது 20 ஆயிரமாகக் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. கொழும்புவில் மட்டும் 4 தங்கு மனைகள் உள்ளன. அவற்றுள் பம்பலப்பிட்டி தங்குமனையில் மட்டும் 5000 பேர் உள்ளனர்.

தங்குமனைகளில் அரசு ஊழியர்கள் சிலரும் குடும்பங்களுடன் தங்கியுள்ளனர். தம் கடைகளையும் வணிக நிலையங்களையும் இழந்தவர்களும் கூட வெளியில் உள்ள பாதுகாப்பற்ற நிலையால் இங்குத் தங்கியுள்ளனர். இங்கு அம்மை முதலிய நச்சு நோய்களால் சிலர் இறந்தும் வருகின்றனர்.

— அடிப்படை : தினமணி 28-11-83

நாள்வரிசைச் செயல்விளக்கம் !

தொடர்ச்சி-2

பாவலரேறுவின் முதல் ஐரோப்பியச் சுற்றுச்செலவு

எண்	நாள்	நேரம்	செயல்விளக்கம்
83)	26-9-83	போன் நகரில் காலை 10க்குமேல்	ஒய்வு போன்நகர் சில கடைப் பகுதிகளைச் சுற்றிப் பார்த்தல்.
84)	„	பகல் 1	சிவபாலன் அறையில் உணவு.
85)	„	பிற்பகல் 5 வரை	ஒய்வு.
86)	„	மாலை 5 முதல் இரவு 9 வரை	மீண்டும் போன் நகரைச் சுற்றிப் பார்த்தல்.
87)	„	இரவு 10	அமெரிக்காவிலிருந்து Fr. சேவியருடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுதல். அவர் அடுத்த முறை அமெரிக்கா வரவேண்டுதல்.
88)	„	இரவு 11	ஒய்வு.
89)	27-9-83	காலை ? வரை	கடிதங்கள் எழுதல்.
90)	„	காலை 10 முதல் பகல் 1 வரை	சிற்றுண்டிக்குப்பின் அன்பர்களுடன் கடைகளுக்குச் சென்று தேவையான பொருள்களை வாங்குதல்.
91)	„	பிற்பகல் 3-30	போனிலிருந்து என்னபெடால் புறப்படல்.
92)	„	மாலை 4-30	என்னபெடால் சேர்தல்.
93)	27-9-83	மாலை 5-30 இரவு 8 வரை	என்னபெடால் த.ம.வி.க. நிகழ்ச்சி
94)	„	இரவு 8.?5	டார்ட்மாண்டு (Dortmond) புறப்படல்.
95)	„	இரவு 9-30	டார்ட்மாண்டு சேர்தல்.
96)	„	இரவு 9 35முதல் 11-45 வரை	சிவலிங்கம் வீட்டில் த.ம.வி.க. அன்பர்களுடன் கலந்துரையாடல்.
97)	„	இரவு 12	Dortmond - இலிருந்து தொடர்வண்டி வழி பெர்லின் புறப்படல்.
98)	28-9-83	காலை 6 30	பெர்லின் Zoological ganden' தொடர்வண்டி நிலையம் சேர்தல். செருமனி உ.த.மு.க. தலைவர் மணி சேகரன் வரவேற்பு.
99)	„	காலை 7 30	Zoological garden- இலிருந்து 10 கல் தொலைவில் உள்ள மணிசேகரன் வீடு சேர்தல்.
100)	„	காலை 9 மணி	பிரான்சுக்கு உ.த.மு.க. தலைவர் அரிமா வீட்டுக்குத் தொலைபேசி வழித் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிகள் பற்றித் தெரிவித்தல். (அரிமா உடல் நல ஆய்வுத் தொடர்பாக மருத்துவ மனையில் இருந்ததாக வீட்டார் கூறினர்.)
101)	28-9-83	முற்பகல்	சிற்றுண்டிக்குப்பின் ஒய்வு.
102)	„	பிற்பகல் 3	பாரிசுக்குச் சம்பத்திடம் தொலைபேசி வழித் தொடர்பு கொண்டு நிகழ்ச்சிகள் குறித்தும், இலண்டனில் வானூர்திச் சீட்டுப் பதிவு குறித்தும் பேச்சு.

தொடரும்

'பாவலரேறை'

வரவேற்கிறோம்!
வாழ்த்துகிறோம்!

கடந்த 10-9-83 அன்று ஐரோப்பியச் சுற்றுச் செலவு சென்று பிரான்சு, செருமனி, சுவிட்சர்லாந்து, இலண்டன் ஆகிய நாடுகளில் உள்ள உ.த.மு.க. கழகக் கூட்டங்களில் தலைமையேற்று ஈழச்சிக்கலின் உண்மை வடிவனையும், உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும் பற்றி அரும் பெரும் சொற்பொழிவுகள் ஆற்றி விட்டு 13-10-83 சென்னை திரும்பிய உ.த.மு.க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைத் 'தமிழ்ச்சுடர்' நெஞ்சுகனிந்து வாழ்த்துகிறது.

அவருடைய நிகழ்ச்சிகளை எல்லாத் தமிழக நாளிதழ்களும் இருட்டடிப்பு செய்துள்ளமை கூட எமக்கு வியப்பில்லை. ஐரோப்பாக் கண்டத்தில் சென்று பெரியார் சிலையைத் திறந்து வைத்துப் பெரியார் யார் என்று உலகோர்க்கு உருக்கமான உரையால் தெளிவாக்கிக் காட்டிய பெரியாரின் உண்மை அன்பர் (பெரியாரின் இறை மறுப்புக் கொள்கையைத் தவிர) பாவலரேறு அவர்களின் நிகழ்ச்சிகளைப் பெரியார் தோற்றுவித்த திரு. வீரமணி அவர்களால் தொடர்ந்து வரும் 'விடுதலை' கூட வெளியிடாமல் விட்டது ஏன் என்றே புரியவில்லை. திரு. வீரமணி அவர்கள் தம் சுற்றுச் செலவு உரைகளை வெளியிட்ட விடுதலை, பாவலரேறு தலைமையேற்று அதில் திரு. வீரமணி அவர்களும் கலந்து கொண்டும் ஐயாவின் உரையின் ஒரு பகுதியைபேனும் வெளியிடாமை ஏன் என்றே புரியவில்லை.

அறிஞனை அறிஞன் என்று ஒத்துக் கொள்ளக்கூட இந்தத் தமிழனுக்கு மனம் வருவதில்லையே! ஏன? தமிழனை யாரும் தாழ்த்தவில்லை - அவன் தம்பியோ தாழ்த்துகிறான் - என்பது இன்னும் உண்மை தானே?

சுற்றுச் செலவுக்குச் சென்று திரும்பி இன்னும் பெட்டி படுக்கைகள் கூடப் பிரிக்கப்படாமல் இருக்கின்றன. வந்ததும் தமக்கு வந்துள்ள ஆயிரக் கணக்கான மடல்களைப் பிரித்துத் தம் கைப்பட விடை எழுதிக் கொண்டிருக்கிறார். (ஒவ்வோர் அன்பருக்கும் தம்கையாலேயே விடையெழுதுவது பாவலரேறு அவர்களின் சிறப்பு. குட்டித் தலைவர்கள் கூட உதவியாளரை விட்டு மடல் எழுதச் செல்லும் காலமல்லவா இது!)

ஈழ நிலையில் ஏற்பட்ட ஏற்படும் - மாறுதல்களை - தமிழக நிலைமைகளை - அறிய வேண்டி ஒரு மாதத் தாளிகைகளிடையே மூழ்கியுள்ளார். மொழிநிலையில் இன நிலையில் அனைத்து நிலையிலும் தனியாக நின்று போராட முனைந்திருக்கும் ஐயாவின் கைகளை வலுப்படுத்த இளைஞர்கள் முன் வர வேண்டும்.

வெளிநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றிய நேர்காணல் அடுத்த 'தமிழ்ச்சுட'ரில் வெளி வரும்.

உலகெங்கும் உ. த. மு. க. வேர்பிடித்து விட்டது. இதை எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதை நேராகக்கண்டு நிமிர்ந்து அந்தத் தலைமைச் சூரியனை கருமேகக் கைகளாம் தமிழக இதழ்கள் எத்தனை நாளைக்கு மறைத்து வைக்க முடியும்?

நன்றி-'தமிழ்ச்சுடர்' செப்-நவ-'83

O ஏழை எளியோரை வாழவிடாத முதலாளியம் தகர்க்கப்பட வேண்டும்!

O இந்தித் திணிப்பை நடைமுறைப்படுத்தும் நடுவண் அரசு அலுவலகங்களை இயங்கவிடக்கூடாது!

நடுவண் அரசின் சூழ்ச்சியை எதிர்த்து மாணவர் - போர்ப்பயிற்சி பெறவேண்டும்!

அமைச்சர் காளிமுத்து வேண்டுகோள் !

மதுரை, நவ. 28 — ஏழை எளியோர் உரிமை இல்லாமல் அடிமைப்பட்டுத் திரியும் நிலைமையும், இந்தி மொழியின் வலுக்கட்டாயத் திணிப்பால் தமிழ்மொழி அழிக்கப்படும் கொடுமையையும் விளக்கி, அமைச்சர் காளிமுத்து, மதுரை, அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மாணவர் பேரவைத் தொடக்க விழாவில், — மாணவர்கள் அரசு நிலைகளை எதிர்த்துப் போர்ப்பயிற்சி பெற்றுக் கொள்ள வேண்டும் — என வேண்டுகோள் விடுத்துள்ளார்! அவர் அங்குப் பேசியதாவது :

இந்திய நாடு விடுதலை பெற்று 35 - ஆண்டுகள் கழிந்தும் இன்னும் ஏழை எளியவர்கள் உரிமை பெற்றபாடில்லை. அதே ஏழ்மையில்தான் உழன்று கொண்டிருக்கின்றனர்.

மாநிலங்களுக்கு அதிகார உரிமை கிடைக்கவில்லை. அரசியல் சட்டத்தை எடுத்துப் பார்த்தால் அதில் நடுவண் அரசுதான் தெரிகிறது! அந்த அளவிற்கு அதிகாரங்கள் குவிந்து கிடக்கின்றன.

வெள்ளைக்காரர்கள் போட்ட அதே சட்டத்தைத்தான் இன்றும் வைத்துக் கொண்டு செயல் படுகிறார்கள் அரசியல் சட்டத்தின் 356-ஆவது பிரிவை வைத்துக் கொண்டு மாநில ஆட்சியை மணல் வீட்டைக் கலைப்பது போல நடுவண் அரசு அடிக்கடி கலைத்து விடமுடிகிறது.

எனவே மாநிலங்களுக்குத் தேவையான அதிகார உரிமை பெறும் அளவிற்கு, அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டும்'

இந்தியாவின் பொருளியல் வளமே. 20-முதலாளிகளிடம் தான் சேர்ந்து இருக்கிறது. அந்த முதலாளிகளைக் கொழுக்க விட்டுவிட்டு எத்தனைத் திட்டங்கள் தீட்டினாலும் அவை மக்களுக்குப் பயன்படா எனவே முதலாளியம் நாட்டில் தகர்க்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பொருளியல் விடிவு ஏற்படும்.

இப்படிப்பட்ட இக்கட்டான அரசியல் வல்லாட்சி ஒருபுறம் இருக்க, மறுபுறம் தமிழ்மொழியை அழிக்க, இந்தி மொழியைத் திணிக்கும் பணி தீவிரமாக நடந்து கொண்டே இருக்கிறது! தமிழ் மொழியைக் குழிதோண்டிப் புதைத்து விட்டுத் தமிழ்நாட்டில் நடுவண் அரசு அலுவலகங்கள் மூலம் இந்தி மொழி திணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது!

நடுவண் அரசு அலுவலகங்கள் இந்திமொழியைப் பரப்பும் நிலையங்களாகச் செயல்படுமானால், தமிழ்நாட்டில் அவை இயக்க முடியாத நிலையை ஏற்படுத்த வேண்டும்! மாணவர்கள் போர்ப் பயிற்சி பெற வேண்டும்!

அதற்காக, மாணவர்களாகிய நீங்கள் தொழிற் பயிற்சியோடு, போர்ப் பயிற்சியும் பெற்றுக் கொள்ள வேண்டும்!

— என்று இளைஞர்களின் உள்ளத்தில் புரட்சி விதைகளைத் தூவும் வகையில் அமைச்சர் காளிமுத்து பேசினார்.

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்
உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும்
தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும்;
எனவே சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

பகுதி-1 இதழ் எண் : 27 (11-12-83) தொகுதி-49-51

இனம் ஒன்றுபடவேண்டும் என்பது எதற்கு?-1

பொதுவாகவே தமிழினத்தை முன்னேற்றவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்ட தலைவர்கள் அனைவருமே தமிழினம் ஒன்றுபடவேண்டும் என்பதையே முதல் கருத்தாகக்கூறி வருகிறார்கள்! 'தமிழர்களுக்குள் ஒற்றுமையில்லை; அவர்கள் பல சாதியினராக, பல மதத்தினராக, பல குழுவினராகப் பிரிந்து கிடக்கின்றார்கள் என்பதே அவர்கள் சுட்டும் ஒரு பெரிய குறை.

'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும், வேந்து அலைக்கும் கொல்குறும்பும் இல்லது நாடு' (725 என்னும் திருக்குறளிலும், மக்கள் பல குழுக்களாக, பல கட்சிகளாகப் பிரிந்து, பலவேறு திசைகளில் இயங்குவது நாட்டு முன்னேற்றத்தைத் தடை செய்யக் கூடியது என்று சுட்டப்படுகிறது.

தாழ்ந்து கிடக்கும் ஓர் இனத்தையோ ஒரு நாட்டையோ முன்னேற்றுவதற்கு முனைகின்ற பலர் பல குழுக்களாகப் பிரிந்து இயங்குவது இயல்புதான். பலவேறு நிலைகளில் முன்னேற்றம் தேவைப்படுமானால் பலவேறு முயற்சிகளுக்கும் பலவேறு குழுக்கள், கட்சிகள் முளைக்கவே செய்யும். இந்நிலையை யாரும் தடுக்க முடியாது. ஆனால் ஒரே கொள்கைக்குப் பலவேறு குழுக்கள் இருப்பது தான், அந்தக் கொள்கையை எளிதில் வெற்றிபெறாமல் செய்து விடும். எனவே, குழுக்கள் அல்லது கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என்று நினைப்பவர்கள் முதலில் கொள்கையை ஒன்றாக்கிக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் உள்ள கட்சிகள் அனைத்துமே வேறுபட்ட அல்லது மாறுபட்ட பலவேறு கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், அவற்றுக்குப் பொதுவான ஒரு கொள்கையாக அல்லது முனைப்பாக இருப்பது, தமிழினம் முன்னேற வேண்டும் என்பதுதான். சில இயக்கங்கள் மட்டுமே, தமிழினம் முன்னேற வேண்டுமானால் முதலில் அல்லது அதோடு இணைந்தே தமிழ் மொழியும் முன்னேற வேண்டும் என்பதையும் ஒரு கொள்கையாக வகுத்துக்கொண்டுள்ளன. எனவே தமிழ்மொழி முன்னேற்றமா, தமிழின முன்னேற்றமா அல்லது இரண்டினதும் முன்னேற்றமா என்பதையும், அவற்றை முன்னேற்றுவதற்கு இங்குள்ள அனைத்துக் குழுக்களும் அல்லது கட்சிகளும் அல்லது இயக்கங்களும் என்ன செய்ய வேண்டும், எந்த அளவில் தாங்கள் இணைந்து செயலாற்றவேண்டும் — என்பன பற்றியும் ஒரு தெளிவை உண்டாக்கிக் கொள்ளுதல் மிகவும் தேவையான — இன்றியமையாத — ஒன்றாகும்.

முதலில், தமிழ்மொழி முன்னேற்றம் தமிழின முன்னேற்றம் என்பது, வேறு மொழிக்கு அல்லது இனத்துக்குப் பொருந்துகின்ற ஒரு பொருளில் கூறப்பெறுவதன்று. தாழ்ந்து இருக்கும் ஒன்றுக்கு முன்னேற்றம் தேவைப்படுகிறது என்றால், அதற்குப் படிப்படியான வளர்ச்சி வேண்டும் என்னும் அடிப்படையிலேயே அம்முன்னேற்றம் ஏற்பட முடியும். ஆனால், ஒரு மொழியோ ஓர் இனமோ ஏற்கனவே முன்னேற்றம் பெற்றிருந்து,இடையில் அம்முன்னேற்றம் தடைப்பட்டு நின்றதோடன்றி, அதில் ஒரு விழ்ச்சியும் ஏற்பட்டு, அவ்விழ்ச்சியினின்று அது தன்னை முன்னேற்றிக்கொள்ள விரும்புமானால், முதல் வகை முன்னேற்றத்திற்குப் போல் அல்லாமல், வேறுவகை அணுகுமுறை இதற்கு வேண்டும் என்பதை அனைவரும் முதலில் அறிந்து கொள்ளுதல் வேண்டும். தாழ்ச்சியிலிருந்து படிப்படியாக முன்னேறுதல் என்பது வேறு; வீழ்ச்சியினின்றும் மீண்டும் தன்னை உறுதிப்படுத்திக்கொண்டு இடைநின்ற நிலையினின்று தன்னை முன்னேற்றிக்கொள்ளுதல் என்பது வேறு.

இங்குக் கூறப்பட்ட நிலைகளுள், இரண்டாவது வகை முன்னேற்றமே தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் கொஞ்சம் கூடுதலாகச் சொன்னால், தமிழ் நாட்டுக்கும் இப்போது வேண்டுவதாகும். அஃதாவது வீழ்ந்துவிட்ட நம் மொழியும் இனமும் நாடும், தம் உறுதிப்பாட்டினின்று சிதையாமல், முன்னேற்றப்படுதல் வேண்டும் என்பதே இங்குள்ள அனைவருக்கும் ஒப்ப முடிந்த கொள்கையாக வெளிப்படுத்தப்பட்டு வருகிறது.

வீழ்ந்து கிடக்கும் ஒன்று, அப்படி ஒன்றும் பொதுவான ஒன்றன்று; சிறப்பான ஒன்று! அதுவும் மிக மிகச் சிறப்பானது! சிறந்து விளங்கியது ஆகும்! சிறப்பான ஒன்று வீழ்ச்சியுற்றால், அவ்வீழ்ச்சி எளிதாய் நேர்ந்ததாக இருக்க முடியாது. ஓர் ஆட்டுக்குட்டி பல்முறை விழலாம்; அவ்வாறே எழுந்தும் கொள்ளலாம். ஆனால் ஒரு யானை வீழ்வது அவ்வளவு எளிதன்று; அவ்வாறு அது வீழ்ந்தால் எழுவதும் அவ்வளவு எளிதன்று. இங்கு தமிழ் மொழியும் தமிழினமும் தமிழ்நாடும் வீழ்ந்து போனதும் அத்துணை அரிய நிகழ்ச்சியே! இவற்றிற்கு நேர்ந்தது தாழ்ச்சியன்று; வீழ்ச்சி! தாழ்ச்சி என்பது தொடக்கநிலையாகவும் இருக்கலாம். அல்லது இடைநிறுத்தமாகவும் இருக்கலாம். ஆனால் வீழ்ச்சியென்பது, இடைநிலை; அதோடு இடைமுறிவு! தமிழர்க்கு நேர்ந்த மொழி வீழ்ச்சியும் இன வீழ்ச்சியும் இன்னுஞ் சொன்னால் நாட்டு வீழ்ச்சியும் அத்தகையனவே! அஃது ஒரு வரலாற்று வீழ்ச்சி! தாழ்ச்சியான ஒன்று முன்னேறுவதற்கு வரலாற்று விழிப்புத் தேவையில்லை; ஆனால் வீழ்ச்சியுற்ற ஒன்று எழுச்சியுறுவதற்கு வரலாற்று விழிப்புத் தேவை! அவ்வீழ்ச்சி ஏன் ஏற்பட்டது எதனால் நேர்ந்தது, எந்தச் சூழ்நிலையில் அது வீழ்ந்தது என்னும் அடிப்படையான வரலாற்று விளக்கம் பெறாமல் வெறுமனே அதை எழவைக்கவோ, இயங்க வைக்கவோ, முன்னேற்றி விடவோ எவராலும் முடியாது.

கால் சறுக்கிய ஒருவன், தன்னைச் சரிசெய்து கொண்டு அல்லது பக்கத்தில் உள்ளவர்களின் ஊக்க உரைகளைக்கொண்டு உடனே தன் நடையைத் தொடர்ந்துவிட முடியும். ஆனால் கால் முறிந்த ஒருவன் அப்படி உடனே நடையைத் தொடர்ந்து விட முடியாது. அவனை விழி, எழு, நட என்றெல்லாம் எவ்வளவு ஊக்கப் படுத்தினாலும், அந்த முறிவைச் சரி செய்யாமல் அவன் நடந்துவிட முடியாது. இனி அந்த முறிவை அவனாலும் சரி செய்து கொள்ள முடியாது. அதற்கொரு கைதேர்ந்த கால் முறிவு பற்றி நன்றாகக் கற்று அறிந்த ஒரு மருத்துவரே தேவை! அவரே அவனை நடக்க வைக்க முடியும். வெறும் ஊக்கப்படுத்தும் உறவினர்களால், அவர்களின் வெற்று எழுச்சி உரைகளால், அவன் நடந்துவிட முடியாது. தமிழனின் வீழ்ச்சியும் வரலாற்றுச் சறுக்கல் அன்று; வரலாற்று முறிவு! அந்த முறிவைச் சரிசெய்தால் ஒழிய, அவனை முன்னேற்றிவிட அது தொடர்பான மருத்துவம் தெரிந்த குமுகாய மருத்துவரால் அன்றி வேறு எவராலும் இயலாது என்பதை எல்லோரும் தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இனி குமுகாய மருத்துவம், அல்லது மக்களின் முன்னேற்றத்தொண்டு, அல்லது குடிசெயல்வகை - எனனும் முயற்சியை அனைவரும் செய்துவிட முடியாது. அவ்வாறான முயற்சியைச் செய்பவர்களுக்குப் பல தகுதி நிலைப்பாடுகள் வேண்டும். அத்தகுதிநிலை ஒருவருக்கேதான உண்டு என்று யாரும் கூறிவிட இயலாது. அந்நிலை இயற்கையாகவே வாய்த்தவர்கள், அல்லது அந்நிலைக்குத் தங்களைத் உயர்த்திக் கொண்டவர்கள், ஒரு கால கட்டத்தில் சிலரோ, பலரோ இருக்கலாம். அவர்களுக்குள்ளும் தகுதிநிலைகளிலும் இயக்க நிலைகளிலும் பல வேறுபாடுகள் இருக்கலாம். அவ்வாறு இருப்பது பிழையன்று; குற்றமும் அன்று. ஆனால் அவர்கள், தாங்கள் வேறுபடும் நிலைகளில் பிரிந்தும், ஒன்றுபடும் நிலைகளில் ஒன்றிணைந்தும் ஈடுபடுவது இயலாததன்று. இயல்கின்ற ஒன்றே! இவ்விரு வகைப்பட்ட நிலைகளையும், அவற்றின் தேவைகளையும், அவ்வாறு பிரிந்தோ இணைந்தோ இயங்கவேண்டிய பொதுவான கூறுகளையும், இக் கட்டுரையின் இறுதியில் பார்ப்போம். அதற்குமுன், ஒரு குடியை உயர்த்துவதற்கு குடி செய்ய விரும்புபவருக்கு - இருக்கவேண்டிய தகுதிப்பாடுகளைப் பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்!

(தொடரும்)

தொடர்-2

ஐந்து நாடுகளில் முப்பது நாட்கள்!

என் முதல் ஐரோப்பியச் சுற்றுச் செலவு

1. அழைப்பு : (நிகழ்ச்சிச் சுருக்கம்)

இவ்வாண்டு ஏப்பிரல் மாத இறுதியில், பிரான்சில் உள்ள திரு. அரிமா வளங்கோ நமக்கு ஒருமடல் விடுத்திருந்தார். அதில் தாம் பிரானசில் உ. த. மு. க. கிளை ஒன்றை அமைக்க விருபபுவத கவும், அதற்கான பொறுப்பாளர்களைத் தெரிவு செய்துள்ளதாகவும் கூறி, அவ்வமைப்புக்கு இசைவு தரவேண்டுமென்றும் கேட்டிருந்தார். அத்துடன் பிரான்சுக் கிளை தொடக்கவிழா இவ்வாண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெறவிருப்பதாகவும், அதோடு பெரியார் விழாவையும் இணைத்து நடத்தவிருப்பதாகவும், அவ்விழாக்களுக்குத் திராவிடர்கழகப் பொதுச் செயலாளர் திரு. வீரமணியும் கலைஞரும் அழைக்கப்பெற்றிருப்பதாகவும் தெரிவித்து, நானும் அதில் கலந்துகொள்ள வேண்டுமென்று அழைப்பும் விடுத்து, இசைவான ஒரு நாளையும் ஒதுக்கக் கேட்டிருந்தார். (கலைஞர் அவர்கள் அழைப்புக்கு விடையே எழுதவில்லை என்று கூறிப் பின்னர் அரிமாவளங்கோ வருத்தப்பட்டுக் கொண்டார்.) உடனே நாமும் அவா தொடங்கவிருந்த கிளைக்கழகத்திற்கு இசைவு கூறி, விழாவில் கலந்துகொள்ள ஒரு நாளையும் ஒதுக்கிக் கொடுத்தோம். அந்த நாளை உறுதி செய்து, பின்னர் அவரின் மடல் வந்தது. நாமும் விழாவில் கலந்து கொள்ளவும், அதையொட்டி மேற்கு செருமனியில் உள்ள நம் தென்மொழியன்பர், திரு. மணிசேகரன் அவர்களுக்கு, அவர் முனபே தெரிவித்திருந்தபடி, உ. த.மு.க. கிளை ஒன்றினை அங்கும் தொடங்கலாம் என்று தெரிவித்தும் மடல்கள் எழுதினோம். செருமனியில் கிளை தொடங்குவதற்கு இசைவு தெரிவித்து திரு. மணிசேகரனும் மடல் எழுதியிருந்தார். எனவே ஐரோப்பா புறப்படுவதற்கான அனைத்து முயற்சிகளும் முறையாகச் செய்யப்பட்டன.

2. புறப்பாடு :

பின்னர், சூலை மாதத் தொடக்கத்தில் இலண்டனுக்குப் போகும் வானூர்திச் சீட்டுகளை திரு அரிமா வளங்கோ அனுப்பியிருந்தார். பலவேறு முயற்சிகளுக்குப்பின், 10-9-83 ஆம் நாள் சென்னையிலிருந்து தில்லி வழியாகப் புறப்பட்டுப் பிரான்சு செல்வதென்றும், அங்கிருந்து முதலில் இலண்டனில் போய் இறங்குவதென்றும் முடிவு செய்யப் பெற்றது. அதையொட்டி அறிக்கையும் கொடுக்கப் பெற்றது.

என்னை வழியனுப்புவதற்காக வெளியூர்களிலிருந்து 8-ஆம் பக்கலும் 9-ஆம் பக்கலும் அன்பர்களும், உறவினர்களில் சிலரும் வந்து போய்க்கொண்டிருந்தனர். 10-ஆம் பக்கல் அதிகாலையிலேயே சென்னை வானூர்தி நிலையம் போய் அங்கிருந்து இந்திய வானூர்தி வழி, பகல் 11 மணியளவில் தில்லி சேர்ந்தேன். வானூர்தி நிலையத்திற்கு என்னை வந்து வழியனுப்பி வைத்த அன்புள்ளங்கள் பற்றிய விளக்கம் முன்னரே தமிழ்நிலத்தில் வெளியிடப் பெற்றுள்ளது. தில்லி பாலம் வானூர்தி நிலையத்தில் அன்பர்கள் திருவாளர்கள் கிருட்டிணகுமார், க. சுப்பிரமணியம், வினோது ஆகியவர்கள் வந்திருந்து வரவேற்றனர். திரு கிருட்டிணகுமார் தில்லி சவர்கலால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆய்வுப் பேராசிரியராக இருக்கிறார். திரு. க. சுப்பிரமணியம் தில்லியில் உள்ள ஒரு நூலகத்தில் பணியாற்றுகிறார். இவர் என் தங்கை கணவர் திரு. மாரி. அறவாழியின நண்பர். திரு. வினோது என் தங்கை மகன் திரு. மொழிக்கரசனின் நண்பர். மூவருக்கும் முன்பே நான் வருவதாக மடல்கள் எழுதித் தெரிவித்திருந்ததால் அங்கு வந்திருந்தனர்.

அன்று பிற்பகல் முழுவதும் திரு. கிருட்டிணகுமார் என்னை நகரின் பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று மாலை 7 மணியளவில் திரு. வினோதின் பொறுப்பில் என்னை ஒப்படைத்துச் சென்றார். வினோது இளைஞர். அவர் மிக்க அன்புடன் என்னை உணவருந்தி, இரவு 12 மணியளவில் புறப்படவிருந்த வானூர்திக்கு என வானூர்தி நிலையம் வந்து வழியனுப்பி விட்டுச் சென்றார். வானூர்தி நிலையத்தில் மீண்டும் திரு. சுப்பிரமணியம் என்னை வந்து பார்த்துப் பேசிச் சென்றார்.

நான் புறப்படவிருந்த பிரான்சு வானூர்தி சரியாக இரவு 12 மணக்குத் தில்லியை விட்டுப் புறப்பட்டு, மறுநாள் 11-9-83 காலை 9-40 (நம் இந்திய நேரம்) பாரீசு வானூர்தி நிலையத்தை அடைந்தது. பாரீசு நேரம் அப்பொழுது 6-10, அங்கிருந்து பிரான்சு நேரம் காலை 9 மணியளவில் இலண்டன் வானூர்தி நிலையத்தை அடைந்தேன்.

(தொடரும்)

பிராமணருக்குச் சார்பாக இல்லையென்றால் முன்னேறமுடியாத நிலை உள்ளது!

சாதியிலே எல்லாரும் ஒரு சுவை, ஒரு நலன், ஓர் இன்பம் காணுகிறார்கள்! அது ஒழியவேண்டும் என்று யாரும் மனமார விரும்பவில்லை! அதனால்தான் அதை ஒழிக்க முடியவில்லை!

பிரான்சு பெரியார் விழாவில் பாவலரேறு பேருரை! தொடர்ச்சி-2

சுப்பிரமணியம் என்றால் சு-பிரமணியம். சுப்பிரமணியம், பிரமணியம் என்றால் பிராம்மணர். அஃதாவது அந்த அசுரப் போரிலே-அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த போராட்டத்திலே-தேவர்களுக்குச் சார்பாக அசுரர்களைச் சுப்பிரமணியன் அழித்ததனாலே தேவர்கள் அவனுக்குக் கொடுத்த பெயர்! யாருக்கு? முருகனுக்கு! முருகன் என்பவன் தமிழ்த் தெய்வம். அந்தத் தமிழ்த் தெய்வத்திற்குப் பெயர் கொடுக்கிறார்கள் சுப்பிரமணியம் என்று! ஏன்? தேவர்களுக்குச் சார்பாக நின்று வெற்றி பெறச் செய்தான். எனவே சுப்பிரமணியம்-"பிராமணர்களுக்கு நல்லவனே" என்று அவனை வாழ்த்துகிறார்கள். பிரமண்யம் என்றால் பிராமணர்-ஆரியப் பார்ப்பனர்! 'சு' என்றால் நல்ல; சுப்பிரமணியம் என்றால் பிராம்மணர்களுக்கு நல்லவனே என்று பொருள். பிராமணர்களுக்கு நல்லவர்களாக இருந்து நம்மவர்களில் எத்தனையோ பேர் வீடணத்தனம் செய்திருக்கிறதைத் தான் நீங்கள் வரலாறுகளிலே காணலாம். இந்த நிலைகளையெல்லாம் அந்தக் காலத்திலேயே உணர்ந்திருந்தார்கள்; ஆனால், சுட்டிக்காட்ட முடியவில்லை. வெளியே சொல்ல முடியாத நிலை. சொன்னால் அடித்துக் கொன்றுவிடுவார்கள். இந்தக் காலத்திலேகூட தமிழ் நாட்டிலே சொன்னால் அவர்களுக்குப் பல வாய்ப்புகள் கிடைக்காமல் போய்விடும். அவன் சட்டமன்ற உறுப்பினராக இருக்கமுடியாது. பெரிய பணக்காரனாக வாழமுடியாது. வாய்ப்புகள் கிடைக்காது. ஏன்? எல்லாவகை வாய்ப்புகளும் மேலினத்தவர் வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் நன்றாகத் தெரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையிலே ஈராயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் ஒரு மாற்றம் ஏற்பட்டது என்ன மாற்றம்? இந்த வேலைகளையெல்லாம் செய்வது மிக அரிது. எல்லாரும் பேசினார்கள்; ஆனால் செய்யவில்லை. நம் மீடத்தில் உள்ள நூற்கள்—கழக இலக்கியங்கள் — எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென்கீழ்க்கணக்கு என்றெல்லாம் நாம் பேசுகிறோமே, பெருமையாக!— இந்த நூல்களிலே பார்த்தால் இதுபோன்ற கருத்துகளை நீங்கள் பார்ப்பீர்கள். ஆனால். அதில் தீர்வான கருத்துகளை நீங்கள் கண்டுபிடிக்க முடியாது. தமிழினம் தாழ்ந்து நின்றது. அதை உயர்த்த யாரும் முன்வரவில்லை. அதைத்தான் சொல்லுவார் திருவள்ளுவர் :

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்". இன்றைக்கும் சொல்கிறேன் நான், சாதி ஒழிய வேண்டும் என்று நாம் எல்லாரும் விரும்புகிறோம்; ஆனால், மனத்திற்குள் யாரும் சாதி ஒழிய வேண்டும் என்று விரும்புகிறதில்லை. ஏன் அதிலே அவனுக்கு ஒரு சுவை; ஒரு நலம்; ஓர் இன்பம்! இங்கு அயல்நாட்டிற்கு வந்தும் கூட, நீ என்ன சாதி? நீங்கள் என்ன சாதி என்று சுருக்கமாக அறைக்குள்ளே போய்க் கேட்டுக் கொண்டிருப்பதை எத்தனையோ ஆட்களிடம் நான் பார்த்து வருகிறேன். எந்த அளவுக்கு எந்த மத மாற்றம் ஏற்பட்டாலும், எந்த மதத்திற்கு மாறிவிட்டாலும். அது புத்தமதமானாலும், சமண மதமானாலும், கிறித்தவ மதமானாலும், இசுலாமிய மதமானாலும் கூட அந்த மதத்திற்கு மாறிய பின்னாலும்கூட—இவர் இரெட்டி மதத்திற்கு மாறிய பின்னாலும்கூட—இவர் இரெட்டி கிறித்தவர், யார் கிறித்தவர், இவர் பகடையாட்சி கிறித்தவர், முதலியார் கிறித்தவர், அரிசனக் கிறித்தவர் என்று இன்றைக்கும் தமிழ்நாட்டிலும் சரி; அயல் நாடுகளிலும் சரி இருந்து வருகிறது. மதம்மாறினாலும் சாதி மாறவில்லை.

சாதி என்பது பெயரளவிலே நின்றால்கூட தாழ்வில்லை. ஆனால், ஏற்றத்தாழ்வோடு நிற்கிற அந்த இழிநிலை தமிழகத்திலே பார்க்கின்றபோது தான் தமிழின முன்னேற்றத்திற்கும் எந்தவகையான முயற்சி செய்தாலும் அது வெற்றி பெறாமல் போய்விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. நாமெல்லாம் ஒன்றாகச் சேரமுடியவில்லை என்று சொன்னால்—அறிவு அளவிலே—கருத்து அளவிலே நமக்கு அப்படிப்பட்ட வேறுபாடுகள் தோன்றி நம்மை வேறுபடுத்திக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறதை தவிட, சாதி அளவிலே, மத அளவிலே நாம் வேறுபட்டுக்கிடப்பதுதான் இயற்கையாக இருக்கிறது. நம்முடைய சாதிப் பெண்ணைப் பார்த்துத் திருமணம் பண்ணிக்கொள்வது! பெரும்பாலும் இந்தத் திருமண நிலையிலேதான் அந்தச் சாதிகள் அப்படியே ஒட்டிக் கொண்டுள்ளன. எந்த அளவுக்குக் கட்டிக் குலவினாலும்கூட—உங்களை வரவேற்றால் கூட - திருமணம் என்று வருகின்றபோது—"நான் என்னங்க பண்ணட்டும்; எங்களுடைய பெற்றோர்கள் அப்படித்தான் பார்த்து அதே பெண்ணைத் திருமணம் பண்ணிக்கொள்ளச் சொல்லி வற்புறுத்துகிறார்கள்" என்று சொல்லுகிற வழக்கந்தான் இன்னமும் இருக்கிறது. இதைத்தான் திருவள்ளுவர் சொன்னார்:

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்" என்று சொன்னார்

சொல்லலாம். பெரிய வீரார்ப்பு-மேடைகளிலெல்லாம் ஏறிப் பேசலாம்; ஆனால், செய்வது கடினம்! அப்படிக் கடினமான ஒரு செயலை யாரவது செய்தால் அவர் பெரியார் என்று திருவள்ளுவர் ஓர் இலக்கணம் போட்டார், 2300 ஆண்டுகளுக்கு முன்னால்! "செயற்கரிய செய்வார் பெரியர்"..பெரியார் என்று சொல்லவில்லை; பெரியர்! இந்தப் 'பெரியர்' என்ற சொல்—அவர் பயன்படுத்திய அந்தச் சொல்-அந்தப் பக்கம் எங்கேயாவது இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை; வேறு பெருக்குத்தான் இருக்கிறது. வாழ்க்கையிலே செய்வதற்கு அரிய செயல்களை யார் செய்கிறார்களோ அவர்கள் பெரியார்!

2300 ஆண்டுகளுக்கு முன்னே இலக்கணம் போட்டார்; அந்த இலக்கணத்திற்கு 300 ஆண்டுகளாக யாரும் கிடைக்கவில்லைங்க! யாராவது சொல்ல முடியுமா? எங்கேயாவது ஒரு பெரியார் இருந்தார் என்று? இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தேடிப் பார்த்தால்—தமிழின வரலாற்றிலே-கபிலரைப் பெரியர் என்று சொன்னார்? நக்கீரன் அப்படியே எதிர்த்துப் போரிட்டானே, அவனைப் பெரியர் என்று சொன்னார்? ஒருவரையும் சொல்ல முடியவில்லை. அல்லது...அங்கே – பனிமலையிலே பேய் புலி பொறித்தேன், அப்படியே வில் பொறித்தேன் என்று பொறித்துக் கொண்டு வந்தார்களே சேர, சோழ பாண்டியர்கள் அவர்களைப் பெரியார் என்று சொன்னார்களா?

"செயற்கரிய செய்வார் பெரியர்". அதெல்லாம் கடினமா? ஓர் அரசை ஆள்வது கடினமா? ஓர் ஆயிரம்பேரை வீரர்களாக நடத்திச் சென்று- அங்கே இமயமலையிலே கொடி பொறித்தது கடினமா? அஃது எவனாயிருந்தாலும் கொடி பொறித்திடலாம். இதை அவனா செய்தான்? படைவீரர்கள்தாம் சென்று செய்தனர். இப்போதுகூட, போர்களெல்லாம் நடக்கும்போது படைகள்தாமே முன்சென்று ஒரு நாட்டை வெற்றிகொள்ளச்செய்வதும்,தோல்வியடையச் செய்வதும்; வேறுயாரும் வருவதில்லை. அப்படித்தான் வந்தான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்! வேண்டுமென்றால் பெரிய வீரன் என்று சொல்லிக்கொள்ளலாம் தமிழின வரலாற்றை நாம் பார்த்தால் பெரிய வீரர்கள் இருந்திருக்கிறார்கள்; இல்லையென்று சொல்ல முடியாது.

உண்மையான வீரர்கள் இருந்திருக்கிறார்கள்; போரிலே வீரத்தனம் காட்டியவர்களைத்தாம் வீரர்கள் என்று சொல்கிறோம். அதேபோல, அறிஞர்கள் இருந்திருக்கிறார்கள். பட்டியலை இப்போது போட்டாலும் உள்ளவர்கள் வரிசை இடம் கொள்ளாது. உலகத்திலுள்ள புலவர்கள் எல்லாரது எண்ணிக்கையையும் விட தமிழினத்திலுள்ள புலவர்களின் எண்ணிக்கை அதிகம். அதை இப்போது பார்த்தாலும் தெரியும்! 'கன்னா பின்னா' வென்று வாயிலே என்னென்ன வருகிறதோ அதெல்லாம் வைத்து வைத்து எழுதுகிறான்; இதுதான் பாட்டு என்று சொல்கிறான்! என்ன எழுதவேண்டும்? என்ன சொல்ல வேண்டும்? மக்கள் அதைப் படித்தால் உருப்படி ஆகிறார்களா, இல்லையா? அதைப் பற்றி அவனுக்குக் கவலையில்லை. அவன் நமைச்சலை வெளியே வந்து கொட்ட வேண்டும். அவன் உடலிலே ஏற்படுகின்ற அந்த அரிப்பை எப்படிச் சொறிந்து தீர்த்துக் கொள்கிறானோ, அப்படி ஏற்படுகிற மன அரிப்பை எந்தச் சொல்லினாலாவது வெளிப்படுத்தி ஆகவேண்டும். ஏனென்றால், அதைப் பாட்டென்று சொல்கிறான்; கதை என்று சொல்கிறான்; நாடகம் என்று சொல்கிறான்! அதைப் பார்த்தால்தான் இந்த இனம் உருப்படியாகாது போலத் தோன்றுகிறது! திரைப்படங்கள் தமிழகத்திலே எடுப்பது எப்படி? அவனவன் அரிப்பைத் தீர்த்துக் கொள்வது! என்ன அரிப்பு? உடலரிப்பு முதல பண அரிப்பு வரை என்னென்ன அரிப்பில் வருகிறதோ அதையெல்லாம் அவற்றில் (திரைப்படங்களில்) புகுத்தி - அதேபோன்ற அரிப்பு உடையவர்கள் வந்து - காசு கொடுத்துப் - பார்த்து நூறாயிரம் பணக்காரராக மாறுவது! இதுதான் கலை!

கலை என்பது மனத்தைச் செப்பப்படுத்துவதாக இருக்க வேண்டும்; அறிவைப் போற்றுவதாக இருக்க வேண்டும்! கலையும் அறிவும் இரண்டு காளை மாடுகள். கலையுணர்வு கவர்ச்சியாகவும், அறிவு உணர்வு கவர்ச்சியற்றும் இருக்கும். கலையுணர்வு அச்சமின்றியும் அறிவு உணர்வு அஞ்சும்படியும் இருக்கும். கலையுணர்வு எதற்கு இயற்கையாகத் தோன்றியது என்று சொன்னால், - அதைப் பார்க்க - கேட்க - பேச - நுகர -

---

திருவெறும்பூர் ஊரக நற்றமிழ்ப் பேரவை சிறப்புக் கூட்டம்:

13-7-83 அறிவன் மாலை 7 மணியளவில் திருவெறும்பூர் பாரதமிகுமின் தொழிலகம் ஊரகம் நற்றமிழ்ப் பேரவை சிறப்புக் கூட்டம் நிகழ்வுற்றது. தொடக்கத்தில் திரு. குழந்தை ஈகவரசன் அவர்கள் தென்மொழி இயக்கப் பாடல்களைப் பாடினார். திரு. துரை. நாகவரசன் அவர்கள் தலைமையேற்க, திரு. நாரா. மகிழ்நன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். 'ஏனிந்த இழிநிலை? எப்போது விடிதலை?' எனும் தலைப்பில் இருவேறு கோணங்களில் பொருளியல் தொடர்பாக திரு. பரமானந்தன் அவர்களும், குமுகாயவியல் தொடர்பாக பேரா. திரு. வீரபாண்டியன். அறி.மு மெய். மு, அவர்களும் உரையாற்றினர்கள். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அவ்விரண்டு நிலையினையும் தொகுத்து 2.15 மணி நேரம் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். திரு. இளங்கோவன் நன்றியுரை கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

செய்தி — ஈகவரசன்.

அடுக்கடைக்காரர்களின் கொள்ளை!

தமிழ்நாட்டில் மொத்தம் 25000 பேர் அடகுக் கடைக்காரர்கள் இருக்கிறார்கள். அவற்றில் 10 ஆயிரம் கடைகள் வடநாட்டு மார்வாடிகளுக்குச் சொந்தமானவை. அவர்களில் சென்னையில் மட்டும் ஏறத்தாழ 3000 பேர் இருக்கிறார்கள். இவர்கள் பொதுமக்களிடமிருந்து 12 விழுக்காட்டிற்கு மேல் வட்டி வாங்கக் கூடாதென்பது சட்டம். ஆனால் இவர்கள் 30 விழுக்காட்டிலிருந்து 120 விழுக்காடு வரை வட்டி வாங்குவதன் மூலம் மக்களைக் கொள்ளையடிக்கிறார்கள்.

வாட்டமுறுந் தமிழினத்தைக் காத்திடுக!

தமிழின முன்னேற்றத்திற்கு சாதி ஒரு பெரிய தடை!

2300 ஆண்டுகளுக்குமுன் திருவள்ளுவர் கூறிய சீர்திருத்த இலக்கணத்துக்கு இலக்கியமாக இருந்தவர் பெரியார்!

ஐம்புலனின்பத்தையும் தூரக்கூடிய உணர்வு கலையுணர்வு! கலை அறிவியலுக்கு நேர்மாறானது (Art is the opposite of science) அறிவியலுக்கு எதிரானது கலையுணர்வு! கலையுணர்வு "வானத்திலே யானை பறக்கிறது!" என்று சொல்லும்! அறிவியல் அப்படிச் சொல்லாது! அஃது எப்படி யானை பறக்கும்? முடியாதே? என்று கேட்கும். இப்படியெல்லாம் இருக்கிற அந்த அறிவுணர்வைத் தவிர்த்து விட்டுக் கலையுணர்வு தனியாக இயங்க முடியாது; கூடாது!

எதிலே தமிழினத்தை வீழ்த்தினன்? பார்ப்பான் நன்றாக எண்ணிப் பார்த்தான். புராண இதிகாசங்களில் வழங்குகிற கதைகளை நாம் சொல்லத் தொடங்கினால் நேரம் பற்றாது; நான்கு நாட்களாகும். அப்போதும் உங்களுக்குப் பசிக்காது; இன்னும் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்று தோன்றும். புராணக் கதைகள் அரபு நாட்டு இரவுக் கதைகளைப் போல - ஆயிரத்தோர் இரவுகளைப் போல (Arabian Nights) - அதிலே சிறிது; இதிலே கொஞ்சம் - அப்படி இப்படி என்று ... கதையே முடியாது. இதைக் கேட்டுக் கேட்டு நம் மக்கள் அறிவை இழந்து - சிந்திக்கும் ஆற்றலை இழந்து வரலாற்று அறிவையே இழந்து - அறிவு கெட்டுப் பேய் வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள்; இனியும் வாழ்வார்கள்! என்ன செய்வது?

நாம் சொல்வோம் "அறிவு நினைவு கெட்டவனே!" என்று! என்ன பொருள் தெரியுமா? அறிவு என்பது நாம் அடுத்து என்ன செய்ய வேண்டும்? எப்படிப் போகவேண்டும்? யாருக்கு என்ன செய்ய வேண்டும்? நாம் அதற்காக என்ன செய்ய வேண்டும்? என்று ஐம்புலன்களால் தெரிந்து கொள்வது; தெரிந்து உயிரை இயக்குவது! அதற்குப் பெயர்தான் அறிவு. நினைவு என்பது நேற்று என்ன செய்தோம்? முந்தின நாள் என்ன செய்தோம்? அதற்குமுன் என்ன செய்தோம்? பத்தாண்டுகளுக்கு முன் என்ன செய்தோம்? என்றெல்லாம் நினைவிலே வைத்திருப்பது. அறிவு என்பது முன்னேற்றத்தைத் தரக் கூடியது; நினைவு என்பது அம்முன்னேற்றத்திற்கு அடிப்படையானது. இந்த நினைவை இழந்துபோனால் அறிவையும் இழந்து விடுவோம். நினைவு என்பது இந்தவீடு நம்முடைய தந்தையால் கட்டப்பட்டது என்பது! அப்படி இந்த வீடு நம் தந்தையால் கட்டப்பட்டது என்றும், பாட்டனுக்குச் சொந்தமானது என்றும், தெரியாவிட்டால் எவனாவது ஒருவன் தப்பித்தவறி நுழைந்து நம்மைப் "போடா வெளியே!" என்றால் நாம் போய்விடுவோம்! ஏன்? இந்தவீடு நமக்குச் சொந்தமானது என்ற நினைவு நமக்குப் போய் விட்டதால்! அப்படித்தான் தமிழின நினைவை நாம் இழந்து விட்டோம்! தமிழின வரலாற்றுப் பொத்தகம் தொலைந்து விட்டது! உரிமைப் பதிவுகளைத் தொலைத்து விட்டோம்!

அதனால் வெளியிலிருந்து வந்தவன், "நீ இந்த நாட்டுக்குச் சொந்தமானவன் அல்லன்; நீ எங்கேயோ ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவன்; இந்நாடு உனக்குச் சொந்தமானது அன்று; இந்நாடு ஆரியநாடு; இது பாரத நாடு; 'அப்படி இப்படி சொன்னதைக் கேட்டு நாமும் "ஆமாங்க; அப்படித்தாங்க இருக்கும்!" என்று சொல்லி விட்டோம். நினைத்துப் பார்க்க வேண்டும்.

நாம் இன்று வரை என்ன சொல்கிறோம் தெரியுமா? பாரதமணித் திருநாடு! பாரதநாடா..! அது துசியந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த குழந்தை பரதன்; அதுவந்து கொஞ்சநாள் ஆண்டது! அதனாலே பரதனின் பெயராலே பாரதம் என்றானது என்கிறார்கள். அதற்குமுன் யாரும் ஆளவில்லையா? அஃது என்ன அவ்வளவு சிறப்பாக ஆண்டது? இப்படிப் பட்டக் கதைகளெல்லாம் நம் அறிவையே மழுங்கடித்து விட்டது! பாரதம் என்ற சொல்லுக்குப் பரதம் என்பது அடிப்படை. பரதம் என்பது பரதவர் என்ற சொல்லிலிருந்து வந்தது; பரதவர் என்பது பாண்டியர்களுக்குப் பெயர். பரவை என்றால் கடல்; கடல் கடந்து அவர்கள் தங்களது ஆளுமையை விரிவு படுத்தியதாலே - கடலிலே கப்பல் - கலம் செலுத்தி வாழ்ந்ததாலே - கடலை ஆட்கொண்டதாலே பாண்டியர்களுக்குப் பரதவர் என்று பெயர். பாண்டியர்கள் இந்தியா முழுவதையும் ஆண்ட ஒரு நிலை வரலாற்றிலே குறிக்கப்படுகிறது. அந்த நிலையிலே தான் இந்தியாவுக்குப் பரதகண்டம் - பரதம் - பாரதம் என்ற பெயர்கள் வந்தன.

இந்தப் பரதம் என்ற சொல்தான் கிழக்கு நாடுகள் வழியாகச் சென்று - நடு ஆசியாவுக்குச் சென்று - பிறகு மேற்கு நாடுகள் வழியாக வந்து நிலைபெற்றது. பரதவர் - பிரதவர் - பிரித்தானியர் - பிரிட்டீசு என்ற சொற்கள் பரதம் என்ற வேரடியாகப் பிறந்தன என்று நான் சொல்லவில்லை பண்டாரகர் (டாக்டர்) எக்கேசு என்னும் வரலாற்றுப் பேராசிரியர் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார். அதேபோல மீனவன் என்ற சொல் பாண்டியரைக் குறிக்கும் சொல்.

பாண்டியன் என்ற சொல் பழையவன், பண்டைக் காலத்தவன், முதல்வன், தென்னவன் என்ற பொருட்களைத் தரக் கூடிய சொல். ஐயா வீரமணி அவர்கள் ஒருவருக்கு தட்சிணாமூர்த்தி என்று இருந்த வடமொழிப்பெயரை மாற்றி, தென்னவன் என்று அழகாக அவருக்குப் பெயர் சூட்டியுள்ளார்கள். என்ன அழகான பெயர்! என்ன மகிழ்ச்சி! தென்னவன் - அந்தத் தென் என்ற சொல்லே தமிழுக்குத்தான் சொந்தம்.

தென் என்ற சொல் தெற்கு என்பதைக் குறிக்கும். தென் + கு (கு = நிலம்) = தெற்கு; கீழ் + கு = கிழக்கு; மேல் + கு = மேற்கு என்ன அறிவியல் தெரியுமா? பெரிய அறிவியல் பேரவையிலே கூட எடுத்துச் சொல்ல முடியும், தமிழ் மொழியில் இருப்பதை!

இதைச் "சூத்திரபாசை" என்று சொல்லி விட்டான்; தேவர்கள் பேசுகிற பேச்சுதான் சமசுக்கிருதம் என்று சொன்னான். சமசுக்கிருதத்தை நாம் பிட்டுப் பார்க்கவில்லை! சமசுக்கிருதத்தில் ஐந்தில் நான்கு பாகம் தமிழ்! இதை இல்லை என்று எந்தச் சமசுக்கிருதப் பேராசிரியரும் சொல்ல முடியாது. சென்னையிலே ஆராய்ச்சி செய்யும் ஓர் அவையைக் கூட்டி - செயின் கல்லூரி சமசுக்கிருதப் பேராசிரியர்களை வரவழைத்தோம்; எல்லாரும் குடுமியைத் தட்டிக் கொண்டு வந்து உட்கார்ந்தார்கள் நாங்கள் எடுத்துப் பேசினோம், "எங்க மறுத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்!" என்று சொன்னோம். 'ஆமாங்க! உண்மைதான்! என்ன பண்ணுகிறது? எங்களுடைய நிலை அப்படித் தான் உள்ளது?' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார்கள். எதற்குச் சொல்கிறேன்? தமிழ்தான் வடக்கே போகப் போக திராவிடமாக மாறும்; இன்னும் வடக்கே போகப் போகப் பிராகிருதமாக மாறுகிறது. அந்தப் பிராகிருதத்தின் இலக்கிய வழக்கு மொழியாக பாலி என்ற மொழி தோன்றியது.

வடக்கே ஆரியர்கள் கி.மு. 1500 முதல் 2000 வரை வந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிக்கிறார்கள் தெளிவாக நமக்குத் தெரியவில்லை. அவர்கள் வந்தபோது அங்கே பிராகிருதமும் பாலியும் வழங்கி வந்தன.

(தொடரும்)

தொலைக்காட்சியில் காட்டப்பெறும் தேசிய நிகழ்ச்சியில் இந்தியும் தமிழும்!

1982-ஆம் ஆண்டு ஆகத்து மாதம் முதல் 1983-ஆம் ஆண்டு மார்ச்சு வரையுள்ள 8 மாதங்களில், மட்டும், தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பட்ட தேசிய நிகழ்ச்சிகளின் மொத்த நேரம் 365 மணியாகும்.

இதில் தமிழ் நிகழ்ச்சி 3 மணி 17 நிமையங்கள். (அஃதாவது ஏறத்தாழ 100-இல் ஒருபங்கு) 0.9 %

ஆங்கிலம்— 54.8 %

இந்தி — 27.8 %; உருது 1.5 %;

வங்காளி — 1 %; பஞ்சாபி 0.5 %

மராத்தி, மலையாளம் 0.2 % தெலுங்கு 0.1 %

மக்களின் வரிப்பணம் பாழடிக்கப்படுகிறது!

ஏழை நாட்டில் எத்தனை இலக்கம் அதிகாரச் செருக்கில் வீணடிப்பது!

எடுத்துக் காட்டுக்கு இரண்டு செய்திகள்:

குப்பையில் போடப்பட்ட 'இந்திரா' பற்றிய செய்திப் படம்!

பரோடா, நவ. 27 :— அண்மையில் இந்திரா காந்தியின் பிறந்தநாளையொட்டி வெளியிடப்பட விருந்த, அவர் பற்றிய ஒரு கருத்து விளக்கப்படம் (Documentary) பல இலக்கம் வருவாய் செலவிடப் பட்டு எடுத்தும் கடைசியில் குப்பைத்தொட்டியில் தூக்கி எறியப்பட்டது.

ஏறத்தாழ 20 நிமையங்கள் ஓடக்கூடிய இப்படம் நான்கு தென்னிந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும், இந்தியிலும் உருவாக்கப்பட்டது. வண்ணத்தில், நிறைய பெருத்த செலவு செய்து எடுக்கப்பட்ட இந்தப் படத்தை இந்திராவின் பிறந்தநாளான நவம்பர் 19-ஆம் பக்கல் தென்னிந்தியா முழுவதிலும் போட்டுக்காட்டத் திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால் இப்படம் தொகுக்கப்பட்ட முறை இந்திராவுக்குப் பிடிக்காமல்போன ஒரே காரணத்தினால் கடைசி நேரத்தில் அப்படம் மூலையில தூக்கி எறியப்பட்டது. இந்திரா-தொடர்பான முகாமையான நிகழ்ச்சிகள் இதில் இடம் பெற்றிருந்தன.

இங்கு முகாமையாக நாம் இன்னொரு செய்தியையும் கவனிக்கவேண்டும்; இரும்புத்தாது ஏராளமான அளவில் சேலத்தில் கிடைத்தபொழுதிலும், அங்குத் தொழிலகம் அமைக்காமல் வட இந்தியாவில் அமைத்துக் கொண்டது தெரிந்ததே! அதேபோன்று கண்ணெய் தடையின்றித் தஞ்சைப் பகுதிக் கடலில் கிடைக்கிற போதிலும் அங்கு எண்ணெய்த் தூய்மை நிலையம் நிறுவாமல், வேம்பாயில் (பம்பாய்) நிறுவிக் கொண்டதும் அறிந்ததே! — இதுபோன்று தென்னிந்தியாவை - குறிப்பாகத் தமிழகத்தை - ஒதுக்கியே வைக்கும் நடுவண் அரசு, மக்களை ஏமாற்றும் விளக்கப் படங்களை மட்டும் தென்னிந்திய மக்களிடம் அவர்தம் மொழிகளிலேயே விளங்கக் காட்டித் தம் பெருமையை அல்லது சாய்காலை நிலைப்படுத்தும் சூழ்ச்சியான செயலையும் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்!

விழலுக்கு இறைக்கப்பட்ட உணவுப்பொருட்கள்!

புதுத்தில்லி. நவ. 27. லகப் பொதுநல நாடுகளின் (Commonwealth) கலந்துரையாடல் நடைபெற்ற அன்று மாலை ஒன்றிய உறுப்பினர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட சிறப்பு விருந்திற்கு வெளிநாட்டு உறுப்பினர்கள் பலர் வந்து கலந்துகொள்ளாமையால் பெரும்பகுதி உணவு பாழடிக்கப்பட்டது.

ஒன்றியத்தின் ஆளுமைப் பொறுப்பை இந்திரா பெற்றபின், இந்தியாவில் சிறு நாட்டு ஒன்றிய கலந்துரையாடல் நடத்தப்பெறுவது இ'து இரண்டாம் முறையாகும். தில்லியிலும், கோவாவிலுமாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன தெரிந்ததே! வெளிநாட்டு உறுப்பினர்களுக்குத் தாம் பெருமை தேடிக்கொள்ளும் வகையில் செலவிடப் படும் நம் நாட்டு வரிப்பணம் அளவுக்கு மீறியதாய் இருப்பினும், அவர்களுக்கு மேலும் பல இலக்கம் உருவாய் செலவு செய்து, கோவா புறப்படும் முன் பெரியதொரு விருந்துக்கும், கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார் இந்திரா. ஏறத்தாழ 41 வகைப்பட்ட உணவுப் பொருள்கள் அவ்விருந்தில் பரிமாறப்படவிருந்தன. இறுதியில் உறுப்பினர்கள் எவரும் அவ்விருந்தில் கலந்துகொள்ளவில்லை. எனவே எஞ்சிய ஏராளமான உணவுப் பொருட்கள் குப்பைத் தொட்டியில் கொட்டப்பட்டன. வாய், வயிறு கழுவ முடியாத ஏழை வாழும் நாட்டில் இழப்பைப் பார்த்தீர்களா?

ஏழை நாட்டின் இழிவான போக்கை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்!

வரலாற்றைப் புதுக்கச் செய்க!

முகாமை மடல்கள் சில.) ஐரோப்பியச் செலவு:

வாழ்த்தும் வரவேற்பும்!

0 உழுவலன்பார்ந்த உடன் தோன்றலீர்! உளம் நிறைந்த வணக்கமும் வாழ்த்தும்! அயல்நாட்டுச் செலவு முடி[illegible] திரும்புவது அறிந்து அகமிக மகிழ்[illegible] ருக வருக' என வரவேற்று உவக்கின்றேன.

நம் மொழியும் இனமும் நலமுறுவதற்கான, வித்தான பல கருத்துகளை அயல்புலம் வாழும் நம மவர்களின் நெஞ்சங்களில் உறுத்[illegible] ஊன்றி, அவை வளமுற வளரும் வண்ணம், சொல்லியும் செய்தும் வந்திருப்பீர்கள் என்பது திண்ணம்.

தங்களைக் கண்டு உரையாடி, ஆற்றிய நற்றொண் டின் விளக்கம் எல்லாம் கேட்டுச் செம்மாப்புறப் பெரிதும் அவாவுடையேன். இயன்றதும் பார்த்துப் பரிவுறுவேன்.

உலகின் பிற பகுதிகளுக்கும் தாங்கள் சென்று சென்று, தமிழ்ப்பணி புரிந்துவர, தாங்கள், நோயற்ற மேனியும், குறையற்ற மனமும் பொருந்திப் பல்லாண்டு வாழவேண்டும் என இறையருளை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

சென்னை-30 தங்கள் அன்புமிக்க
12-10-83 ஆட்சிச் சொற்காவலர்
கீ இராமலிங்கனார்.

0 பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம். நீங்கள் அயல்நாட்டுச் செலவு முடித்துக்கொண்டு, நாடு திரும்பும் நற்செய்தி இன்று கிடைக்கப்பெற மகிழ்கிறேன்.

பல்வேறு நிகழ்ச்சிகளில் உங்களுடைய பங்கேற் பால் அய்ரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர் களுக்குத் தெம்பும் தெளிவும் ஆர்வமும் மிகுதி யுற்றிருக்கும். தங்களுடைய விளக்கங்கள் அவர்களு டைய தமிழினப் பெருமையுணர்வை ஆழப்படுத்தி யிருக்கும். பாவாணர், திரு.வி.க. பெரியார் முதலிய வர்களின் தொண்டின் சிறப்பை நம் மக்களுக்கு எடுத்தியம்பித் தூயதமிழ் வளரவும் இனம் உரிமை பெறவும் என்றும் போல் ஒயாது உழைக்கத் திரும்பும் உங்களை உவகையோடு வரவேற்கிறேன்.

கோவை. அன்புள்ள,
12-10-83 கு. வெ. கி. ஆசான்

0 வருக! உலகந் தமிழ்நலம் வாய்ப்பத்
தருநற் றிறத்தால் தகைமை—பெறுபயணம்
முற்றி, முழங்கி, முனைபா வலரேற்றின்
நற்றிறம் வாழ்க நலம்!

ஈரோடு-1 — வேலா. இராசமணிக்கம்
13-10-83 ஆசிரியர், 'குறளியம்'

0 பேரன்பு மிக்க பாவலரேறு ஐயா அவர்களுக்கு, தங்கள் ஆனந்தன் வரைவது. வணக்கம். தங்களது பயன்மிகு ஐரோப்பியச் சுற்றுச் செலவை முடித்துத் தாயகம் திரும்பிப் புத்துணர்வுடன் இனச் செயலாக்கத்திற்கு வழியமைக்கும், இப் பொன்னுள நாளில் தங்களை வாழ்த்தி வரவேற்கிறேன்.

கோபி. 13-10-83 — கு.ச. ஆனந்தன்.

0 அறிவு சார்ந்த, தமிழனின் விடிவெள்ளியாய், வழிகாட்டியாய், ஒளிகாட்டியாய் விளங்கும் பாவல ரேறு ஐயா அவர்களே! வணக்கம்.

தமிழின மீட்சியும் மாட்சியும் மாண்புறத் தாங்கள் பலகாலம் வாழ்கவென எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுவன்! தங்களின் ஒருமாதகால மேலைநாடுகள் சுற்றுச் செலவு வெற்றியுடன் உ.த.மு. கழகத்தின் கொள்கைக் காலூன்றி, உலக நாடுகளில் திரு.வி.க., தந்தை பெரியார் கொள்கை பரப்பியும் ஈழத்தமிழரின் துயர்நிலை கூறித் தமிழர்களை ஒரு முகப்படுத்தும் முயற்சியில் தங்கள் செலவு முடிந்த மைக்கும் இன்னும் பல நாடுகளுக்கும் சென்று தமிழினம் ஒன்றுபடுத்தவும் தங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

பாரிசில் பெரியார் சிலைதிறப்புச்செய்தி 'விடுதலை' யில் கண்டோம். 'தினகரனி'ல் கையகலச் செய்தி தான்! ஆனல் 'முரசொலி'யில் தங்கள் பெயர் மட்டும் காணவில்லை. 'தமிழ்நிலம்' இதழில் மட்டும் 'கலைஞர்' என்று அடைமொழிப் பெயர் கொடுத்து வெளியிடுவது ஏன் என்பது தெரியவில்லை.

அமரர் பூண்டி. அன்புடன்
17-10-83 க. கதிர் குன்றன்.

0 ஐரோப்பிய நாடுகள் சுற்றுச் செலவை மேற் கொண்டு, அங்கு நடந்த உ.த.மு.க. தொடக்க விழாக் கூட்டங்களிலும், தந்தை பெரியார், தமிழ்த் தென்றல் திரு வி.க. ஆகிய பெரியோர்களின் பிறந்த நாள் விழாக் கூட்டங்களிலும் கலந்து, ஈழத்தமிழர் களின் இன்னல் படுகொலைகள் பற்றியும், நம் இயக் கக் கொள்கைகளின் முனைப்பாடு பற்றியும் உலகறி யும் வண்ணம் எடுத்தியம்பி, மற்றும் பல கருத்தரங்கு களில் கலந்து, தமிழின மேம்பாட்டுக்காக உரை நிகழ்த்தித் தாயகம் திரும்பியுள்ள உ. த. மு. க. முதல்வர் ஐயா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைப் பழனி வட்ட உ.த.மு.க. சார்பில் வருக வருகவென வரவேற்கிறோம்.

வட்டத்தலைவர்: பாலு, தென்னவன், மற்றும், புதுமை விரும்பி, பூண்டி மறவன், ந. தமிழரசு, ஆ. குப்புசாமி, ஆறுமுகம், ச. தினகரன், மு. தங்கச் சாமி, க. இளங்கோ அறிஇ, நா. நாகமாணிக்கம், ஆ. காளியப்பன், வே. தண்டபாணி, நவரததராசு, மு. இராசேந்திரன், து. துரையரசு, நா. இராமசாமி, சி. முத்துமாணிக்கம், க. கண்டிமுத்து, சு. கரிகாலன், மு. பொன்னுச்சாமி.

0 நெஞ்சம் நிறைந்த இனிய பாவலரேறு அய்யா அவர்கட்கு.

வணக்கம். தாங்கள் அயலகச் செலவுதனை வெற்றியுடன் நிறைவுசெய்து தமிழகம் திரும்பிய தறிந்து மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

தமிழீழ விடுதலை மறவர்களுக்கு ஆக்கமான திட்டங்களை அணியம் செய்து துணை இருப்பதற் கான நோக்குகளை அங்கே வகுத்திருப்பீர்கள் என நம்புகிறேன். தொண்டமான்களும், அமிர்தலிங்கங் களும், அரசியல் வல்லூறுகளும், தமிழ் இனத்தி லேயே தோன்றிய கோடரிக் காம்புகளாய் மாறும் பொழுது, அவர்கள் பிடியிலிருந்தும், வல்லாண்மை யிலிருந்தும், தமிழ் இனத்தை விடுதலை செய்யத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும், அதன் வீர மறவர்களும் முகுந்தனின் வழித் தோன்றல்களும் வலுப்பெற நாம் துணையாய் இருப்பதுதான் நமது கடமை.

உலகத்தமிழின முன்னேற்றக் கழகம் எங்கும் விரிவடைந்து, தெளிவுமிக்க, உணர்வுமிக்க மறவர் களைத் தன்னிடத்தே கொண்ட பேரியக்கமாக மலர்விக்க வேண்டும். நலிக்கப்பட்ட நந்தமிழினம் மீளவும், இவ்வுலக உருண்டையில் தமிழனுக்கெனத் தனி ஆளுமை உரிமை கொண்ட ஒரு நாடு சமைக்கும் சீரிய பணியைச் செயலாக்கு வதிலும் தங்கள் பின்னே வர அணியமாக இருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களில் நானும் ஒருவனாக இணைவேன் என்கின்ற உறுதியை மீண்டும் தங்களுக் குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் — தொய்வின்றித் தொடரட்டும்.

ஒட்டன் சத்திரம் என்றும் உங்கள் அன்புள்ள
23-10-83 ஒடவை. தமிழ்வேந்தன்.

அன்பர் ஒருவரின் வாழ்த்து!

உலக வியப்புகளுள் ஒன்று!

0 அன்பு நிறை பாவலரேறு ஐயா அவர்கட்கு, வணக்கம். தாங்கள் அயல்நாடுகள் செல்வதறிந் தேன். அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அப் பழுக்கற்ற தமிழறிஞர் ஒருவர்—தமிழைத் தவிர வேறு சாதி, மத, அரசியல்; அரசு அலுவல் போன்ற எந்த வகையான பின்னணியும் துணையும் இல்லாத ஒருவர்—இங்கிலாந்து, பிரான்சு, போன்ற நாடுக ளுக்குச் செல்வதும், சென்று நம் கருத்துகளைப் பரப்புவதென்பதும் உலக வியப்புகளுள் — புதுமை களுள் ஒன்றாகும். அத்தகு நல்வாய்ப்பு தங்கட்குக் கிடைத்திருப்பது ஒவ்வோர் உண்மைத் தமிழனும் பெருமைப்பட வேண்டிய செய்தியாகும். தங்கள் செலவு முழு வெற்றி பெறும்.

25—7—83 வேலூர். ம. நாராயணன், க.மு.

'சுதந்திரன், ஆசிரி[...] கோவை ம[...]கச[...] விடுதலை : ஆனா[...]

கடந்த சூலை மாதம் 1-ஆம் பக்கல் [...] நெருக்கடிகாலச் சட்டத்தின்படி சிறை[...] பட்ட 'சுதந்திரன்' கிழமையிதழ் ஆ[...] தமிழீழ விடுதலை முன்னணிச் செயலாள[...] சிறந்த விடுதலை வீரரும், புரட்சி எழுத்[...] ஆகிய திரு கோவை. மகேசன், அவர்கள், [...] 5 மாதகாலச் சிறை வாழ்க்கைக்குப் பி[...] 17-11-83 - இல் மட்டக்களப்புச் சிறை[...] விடுதலை செய்யப்பட்டார்.

கலவரத்தின் பொழுது இவர் வெ[...] சிறையிலிருந்தார். பின்னர் மட்டக்களப்[...] உடைப்பின் பொழுது, இவர் வெளியேறவி[...]

விடுதலையாகிக், கோப்பாயில் இருக்கும் [...] வந்த அறிஞர் மகேசனை அன்பர்களும் [...] சிறப்பாக வரவேற்றனர்.

— ஈழநாடு. 1[...]

பேரா. மு. தமிழ்க்குடி ம[...] அவர்களின்

'10 ஆண்டுத் தமிழ்க் கவிதைகள்- ([...] 1976)' என்னும், பண்டாரகர் ப[...] ஆய்வுநூல் மரபுப் பாடலுக்கு ஏற்[...] விளைவிக்கும்!

பேரன்புடைய ஐயா!

வணக்கம். 8-11-83-ஆம் நாள் பல்கலை[...] 'பண்டாரகர்' பட்டத்தை வழங்கியது. என் [...] முடிவில் குறிப்பிடத்தக்கவராகத் தாங்கள் [...] வதை நிறுவியுள்ளோம். எனினும் மு[...] இசைவு வாங்கியபிறகு முடிபுகளை வெளியிடு[...]

என் ஆய்வில் பொதுவாக மரபுக் 'கவி[...] ஏற்றத்தையும் குறிப்பாகப் பெருஞ்சித்தி[...] மேலும் ஒரு சிறப்பையும் விளைவிக்கும் [...] நம்புகிறேன். அத்தகைய பாவலரேறு அ[...] என் வணக்கமும், வாழ்த்துக்கு நன்றியும் உரி[...]

மதுரை-14 அன்பு[...]
(25-11-83) மு. தமிழ்க்கு[...]

பாரிசு, உ.த.மு.க. அமைப்[...] நன்றி மடல்!

எங்கள் வணக்கத்திற்கும் போற்றுதலுக்[...] எங்கள் ஐயா அவர்களுக்கு,

வணக்கம். நலமே சேர்ந்திருப்பீர்கள் [...] நம்புகின்றோம்.

எங்கள் எளிய வேண்டுகோளுக்கு [...] ஐரோப்பியச் சுற்றுச் செலவினை மேற்[...] எங்களுக்கு அறிவூக்கமும் செயல்முடுக்கமு[...] தந்தை பெரியார் பெருவிழாவினை உலகே [...] விதிர்விதிர்ப்புக் கொள்ளும் வண்ணம் [...] திறம் தென்மொழிப் பாசறையினர்க்கே [...] என்பதை உணர்த்தி, மொழி, இனம், நாடு [...] முந்நிலைகளிலும் அடிசாய்ந்து பட்ட இ[...] தைத் தூக்கி நிறுத்தும் குடி செயல்வகை [...] எமக்கு ஊட்டிய பெருஞ்செயலுக்கும் [...] மெய்யறிவுப் பேருரைகளுக்கும் நெஞ்சுகனி[...]

ஒரு திங்கள் ஐரோப்பியச் சுற்றுச் [...] தங்களுக்குச் சிறிதேனும் பயன்பட முடி[...] மகிழ்கின்றேன். அன்பர்கள் நிலையம் அதுவே[...]

பிரான்சு அன்பு ம[...]
14-10-83 அரிமாவ[...]

உ.த.மு.க.வின் உயர்ந்தகொள்கைகள் :

- தாய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைதோறும் வெளிவரும். பதிவு எண்: TN/MS/C)/65

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 5

பெறுநர்.
திரு.

தூல்.

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.